## மக்களுக்கான ஆட்சியாக – மக்களுடன் ஒன்றிணைந்து மாபெரும் சாதனைகளைச் செய்து வருகிறார் முதல்வர்!

# தமிழ்நாட்டில் விரைவில் கூட்டுறவுச் சங்கங்களுக்கு தேர்தல்!

## சட்டப்பேரவையில் – அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் பதிலுரையில் அறிவிப்பு!

**சென்னை. ஏப். 11 -**

**சட்டப்பேரவையில் கூட்டுறவுத் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்குப் பதிலளித்து உரையாற்றிய அமைச்சர் கே.ஆர். பெரிய கருப்பன், "தமிழ்நாட்டில் விரைவில் கூட்டுறவு சங்கங்களுக்கான தேர்தல் நடத்தப்படும்" என்று அறிவித்தார். மேலும், "மக்களுக்கான ஆட்சியாக, மக்களுடன் ஒன்றிணைந்து மாபெரும் சாதனைகளைச் செய்து வருகிறார் நம் முதல்வர் அவர்கள்" என்று குறிப்பிட்டுள்ளார்.**

கூட்டுறவுத் துறை மானிய கோரிக்கையில் அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் பதிலுரை வருமாறு:-

கூட்டுறவுத் துறை குறித்த மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்குப் பிறகு என்னுடைய பதிலுரையைத் தொடங்குகிறேன். முதலில் உங்களை வணங்குகிறேன். அறிவு ஆசான் தந்தை பெரியார், அறிவுலக மாமன்னர் பேரறிஞர் அண்ணா, அறிவாலய சூரியன் முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோர் காட்டிய வழியில், ஊட்டிய உணர்வில் வாளேந்தும் மன்னர்களும், மானியங்கொள் புலவர்களும், மகிழ்வாய் அந்நாளில் தாளேந்தி காத்த தமிழ்மொழியை தாய்மொழியை, உயிரை இந்த நாளேந்தி தோளேந்தி காத்துநிற்கும் முதல்வராய், சலுகை போனால் போகட்டும், அலுவல் போனால் போகட்டும், தலைமுறை கோடிகண்ட தமிழ் விடுதலையாகட்டும் என்கின்ற உணர்வோடு மொழி உணர்ச்சி, இன உணர்ச்சி, தமிழ் நாட்டின் வளர்ச்சிக்கு யார் தடையாக இருந்தாலும் அந்தத் தடைகளைத் தகர்தெறியும் தடந்தோள் மிக்கவராக உள்ளார்; இனமானத்தை அடமானம் வைத்து சன்மானம் பெறுகிற தன்மானம் அற்றவன் அல்ல; மானமிகு சுயமரியாதைக்காரர் முத்தமிழறிஞர் கலைஞர் பெற்ற பிள்ளை நான் என்பதை நெஞ்சை நிமிர்த்தி இமயம்போல் கம்பீரமாய் உயர்ந்து நிற்கும் தன்னிகரில்லா தலைவராய், எனக்கு எல்லாமுமாக இருந்து என்னை இயக்குகின்ற அன்புத் தலைவர் தமிழக முதலமைச்சர் அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) கல்லடியா கவலைப்படாதே! சொல்லடியா சோர்வடையாதே! பகைவரின் படையா பயப்படாதே! சனாதனமா எதிர்த்துப் போராடு! என போர் முழக்கம் செய்து, இன பகைவர்களையும், மொழி பகைவர்களையும் அலறவிட்டு, தமிழ்நாட்டு இளைஞர்களை ஈர்த்து நிற்கும் மன்னவர், கொள்கை எதிரிகளுக்கு சிம்ம சொப்பனமாகத் திகழும் எங்களின் பாசமிகு சின்னவர், தமிழ்நாட்டின் துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன். அவை முன்னவர் உள்ளிட்ட அமைச்சர் பெருமக்களையும், சட்டமன்ற உறுப்பினர்களையும், அரசு தலைமைக் கொறடா அவர்களையும், பேரவைத் துணைத் தலைவர் அவர்களையும், பேரவைத் தலைவராகிய உங்களையும் மீண்டும் ஒரு முறை வணங்குகிறேன்.

## இந்திய அளவில் இரண்டரை மடங்கு இலாபத்தை ஈட்டக்கூடிய வங்கிகள் நடத்தும் ஒரே மாநிலம் தமிழ்நாடு!

சிவகங்கை மாவட்டச் கழகச் செயலாளராகவும், திருப்பத்தூர் சட்டமன்றத் தொகுதியில் நான்கு முறை பணியாற்றுகின்ற வாய்ப்பினை வழங்கிய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களையும், அன்புத் தலைவர் முதல்வர் அண்ணன் தளபதி அவர்களையும், எனது வெற்றிக்காகப் பணியாற்றிய திராவிட முன்னேற்றக் கழகம் மற்றும் தோழமைக் கட்சி நிருவாகிகளுக்கும், வாக்களித்து வெற்றிப் பெறச் செய்த தொகுதியின் என் நெஞ்சம் நிறைந்த வாக்காளப் பெருமக்களுக்கும், என் தாய், தந்தையருக்கும் வணக்கத்தைத் தெரிவித்து, என் பதிலுரையைத் தொடங்குகிறேன்.

கூட்டுறவுத் துறையானது வங்கிகள், தொடக்க வேளாண் சங்கங்கள், வேளாண்மை உற்பத்தியாளர் விற்பனைச் சங்கங்கள், பணியாளர் கூட்டுறவு கடன் சங்கங்கள், நுகர்வோர் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் என பல்வேறு வகையான சங்கங்களை உள்ளடக்கியது.

### பொருளாதார வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கும் துறை!

இச்சங்கங்களின்மூலம் விவசாயப் பெருங்குடி மக்களுக்கு பயிர்க்கடன், கால்நடை வளர்ப்புக் கடன் மற்றும் மாற்றுத் திறனாளிகள் கடன், மகளிர் சுய உதவிக் குழுக் கடன், கணவனை இழந்த கைப்பெண்களுக்கு வாழ்க்கையில் முன்னேறக் கடன், நகைக் கடன், சிறுவணிகக் கடன், மூலதனக் கடன் என பல்வேறு வகையான கடன்களை வழங்கி, அவர்களின் பொருளாதார வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கக்கூடிய ஒரே துறை கூட்டுறவுத்துறையாகும்.

மேலும், இந்தக் கூட்டுறவுத் துறை, கூட்டுறவு நிறுவனங்கள் கிராமப்புற மற்றும் நகர்ப்புற மக்களின் நிதித் தேவைகளைப் பூர்த்தி செய்வது மட்டுமின்றி, அதிக வட்டிக்கு பணம் கொடுப்பவர்களின் பிடியிலிருந்து காப்பாற்றி, குறைந்த வட்டி விகிதத்தில் கடன் வழங்கி, அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதில் கூட்டுறவு நிறுவனங்கள் முக்கிய பங்கு வகிப்பதுடன், பொதுமக்களிடையே சேமிப்பு மற்றும் முதலீட்டு பழக்கத்தையும் ஊக்குவிக்கின்றன.

இந்தியாவிலேயே கூட்டுறவுச் சங்கங்கள் முதன்முதலாக திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள திரூர் என்ற இடத்தில் 1904ஆம் ஆண்டு துவங்கப்பட்டது. எனவே, கூட்டுறவின் தாய்மடி தமிழ்நாடுதான் என்றால் அதுவும் மிகையாகாது. இதுமட்டுமின்றி தமிழ்நாடு முழுவதும் உள்ள 2 கோடியே 20 இலட்சம் குடும்ப அட்டைதாரர்களுக்கு அத்தியாவசிய பொருட்களை கொண்டு சேர்க்கின்ற துறையாகவும் இது உள்ளது. மேலும், புயல், வெள்ளம் போன்ற பேரிடர் காலங்களிலும் மற்றும் கொரோனா பெருந்தொற்று போன்ற காலங்களிலும், இயற்கைச் சீற்றங்களின்போதும் மக்களின் துயர் துடைத்து, அதற்கான நிவாரணங்களை பொதுமக்களிடம் கொண்டுபோய் சேர்க்கும் ஒரு சேவைத் துறையாகவும் இத்துறை செயலாற்றுகிறது.

மேலும், விலைவாசி உயர்வு காலங்களில், விலையினைக் கட்டுப்படுத்தி பொதுமக்களுக்கு கூட்டுறவு பண்டகசாலை மற்றும் பல்பொருள் அங்காடிகள்மூலம் குறைந்த விலையில் அப்பொருட்கள் கிடைக்க செய்கிறது. உதாரணமாக, சமீபத்தில் ஏற்பட்ட விலைவாசி உயர்வின்போது, தக்காளி, வெங்காயம் போன்ற அத்தியாவசியப் பொருட்களை குறைந்த விலையில் கூட்டுறவுத் துறை விற்பனை செய்தது.

## கிராமப்புற - நகர்ப்புற மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதில் கூட்டுறவு நிறுவனங்களுக்கு முக்கியப் பங்கு!

### கடன் தள்ளுபடி மூலம் 38,82,734 குடும்பங்கள் பயன்!

இதன்மூலம் வெளிச்சந்தையில் அப்பொருட்களின் விலைவாசி கட்டுக்குள் வந்தது. கூட்டுறவு நிறுவனங்கள்மூலம் செயல்படுத்தப்பட்ட கடன்கள். பயிர்க்கடன் தள்ளுபடி. விவசாயிகளின் துயர் துடைக்க முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான அரசு பொறுப்பேற்ற பின் கூட்டுறவு வங்கிகளில் விவசாயிகள் பெற்ற பயிர்க் கடன் நிலுவைத் தொகையான ரூ.12,110 கோடியை தள்ளுபடி செய்தது நம் திராவிட மாடல் அரசு. இதன்மூலம் 16,43,347 விவசாயிகள் பயன் அடைந்துள்ளனர்.

மகளிர் சுய உதவிக் குழு கடன் தள்ளுபடி.


மகளிரின் பொருளாதார மேம்பாட்டினை ஊக்குவிக்கும் நோக்குடன், மகளிர் சுய உதவி குழுக்கள் கூட்டுறவு நிறுவனங்களில் பெற்றிருந்த கடன் நிலுவைத் தொகையான ரூ.2,117 கோடியை தமிழக முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான இந்த அரசு தள்ளுபடி செய்தது. இதன்மூலம் 1,01,897 மகளிர் சுய உதவி குழுக்களில் உள்ள 10,56,296 மகளிர்கள் பயன் அடைந்துள்ளனர்.

முதலமைச்சர் அவர்களின் தேர்தல் வாக்குறுதியினை நிறைவேற்றும் வகையில் 313 2021 வரை நிலுவையில் இருந்த ஐந்து பவுனுக்குட்பட்ட பொது நகைக் கடன் ரூ.4,918 கோடி தள்ளுபடி செய்யப்பட்டு, சான்றிதழ்களுடன், நகைகளும் திருப்பி வழங்கப்பட்டுள்ளன. இதன்மூலம் 11,83,091 குடும்பங்கள் பயன் அடைந்துள்ளனர். மேற்கண்ட மூன்று கடன் தள்ளுபடிகள்மூலம் தமிழக முதல்வர் அவர்களின் தலைமையிலான அரசு ரூ.19,145 கோடியை தமிழ்நாட்டு மக்களுக்கு தள்ளுபடி செய்திருக்கிறது. இதன்மூலமாக 38,82,734 குடும்பங்கள் பயன்பெற்றிருக்கின்றனர் என்பதை பெருமையோடு நான் இங்கே சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழ்நாட்டில் குறுகிய கால கடன்களை வழங்கக்கூடிய கூட்டுறவு அமைப்புகள் மூன்று அடுக்கு முறையை கொண்டதாகும். முதல் அடுக்கு கிராம அளவில் விவசாய மக்களின் தேவைகளை பூர்த்தி செய்யக்கூடிய தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள். இரண்டாவது அடுக்காக மாவட்ட அளவில் மத்திய கூட்டுறவு வங்கிகள் சிறப்பான ஒரு செயல்பாட்டினை அளிக்கின்றன. மூன்றாவது அடுக்கில் மாநில அளவில் தமிழ்நாடு மாநில தலைமைக் கூட்டுறவு வங்கி உள்ளது. தமிழகத்தில் கூட்டுறவுத் துறையின் நிதித் தேவைகளை பூர்த்தி செய்யக்கூடிய மிக முக்கிய வங்கியான தமிழ்நாடு மாநில தலைமைக் கூட்டுறவு வங்கி மற்றும் மாவட்ட அளவில் செயல்படக்கூடிய 23 மத்திய கூட்டுறவு வங்கிகளும் 202425 ஆம் நிதியாண்டில் பெற்ற தகவலின் அடிப்படையில் அனைத்து மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளும் இலாபத்தில் செயல்படக்கூடிய வங்கியாக உள்ளது.

### கூட்டுறவுத் துறையின் சாதனைகளில் ஒன்று!

குறிப்பாகவும், சிறப்பாகவும் சொல்ல வேண்டுமென்றால், முதலமைச்சர் அவர்கள் இன்றைக்கு சட்டமன்றத்தில் அறிவித்த அறிவிப்பின்படி 9.36 தனிநபர் வருமானம் ஒரு பொருளாதார வளர்ச்சி என்று அறிவித்து காலையில் ஒரு நல்ல செய்தி வந்தது. அதையும் கடந்து ஜனநாயக நாட்டில் நம்முடைய சட்டமன்றத்திற்கான உரிமைகளை நிலைநிறுத்துகின்ற வகையில் முதலமைச்சர் அவர்கள் தொடுத்த, தமிழக அரசின் சார்பில் தொடுக்கப்பட்ட அந்த வழக்கின் மூலமாகவும் இன்றைக்கு ஒரு மகிழ்ச்சிகரமான தினம்



என்று முதலமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிட்டுச் சொன்னார்களே. (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல அந்த மசோதாக்களுக்கும் இன்றைக்கு கிடைத்திருக்கிறது. ஆக, பொருளாதார வளர்ச்சி இன்றைக்கு 9.36 சதவிகிதம் என்ற இந்த இலக்கை எட்டியிருப்பது இந்த கூட்டுறவுத் துறையின் சாதனைகளில் அதுவும் ஒன்றாகும் என குறிப்பிட்டுச் சொல்ல நான் விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) காரணம் என்னவென்றால் இந்திய அளவில் இத்தகைய சிறப்பைப் பெற்ற ஒரே மாநிலம் நம்முடைய தமிழ்நாடுதான். அதற்குக் காரணம் நம்முடைய தமிழக முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதல். அகில இந்திய அளவில் 351 மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகள் இருக்கின்றன. அந்த 351 மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளில் இன்றளவும் 46 வங்கிகள் நட்டத்தில் இயங்குகின்றன. அகில இந்திய அளவில் உள்ள 351 மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகள் ஈட்டிய நிகர இலாபம் ரூ.1881 கோடி. இது அகில இந்திய அளவில் ஈட்டப்பட்டது. இது சராசரியாக பார்த்தால், ஒரு வங்கி ஆண்டொன்றுக்கு ரூ.5.35 கோடியை நிகர இலாபமாக ஈட்டி இருக்கிறார்கள்.

ஆனால், தமிழ்நாட்டில் உள்ள 23 மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளும், நம்முடைய வங்கிகள் இலாபத்தில் இயங்குகின்றன. மொத்தம் ரூ.304 கோடி இலாபத்தை ஈட்டியிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆக இதனுடைய சராசரி தொகையை பார்த்தீர்களென்றால் ரூ.13.21 கோடி ஆகும். இவற்றை ஒப்பிடும்போது இந்திய அளவில் 2 மடங்கு இலாபத்தை ஈட்டக்கூடிய வங்கிகளை நடத்தும் ஒரே மாநிலம் நம்முடைய தமிழ்நாடுதான் என்பதை பெருமையோடு சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

### ஐந்து தேசிய விருதுகள்!

ஆக இப்படிப்பட்ட தமிழக அரசினுடைய கூட்டுறவுத் துறையினுடைய வங்கி வளர்ச்சிகளை, செயல்பாடுகளை பாராட்டுகின்ற வகையில் அகில இந்திய அளவில் நடைபெற்ற விருதுகள் வழங்குகின்ற நிகழ்ச்சியில் கூட்டுறவு வங்கிகள் சார்பாக 60வது ஆண்டுவிழா நடைபெற்றது. அதில் ஐந்து தேசிய விருதுகளை நம்முடைய தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்கள் மற்றும் வங்கிகளுக்கு ஒன்றிய அரசு வழங்கியிருக்கிறது (மேசையைத் தட்டும் ஒலி) என்பதையும் நான் இங்கே பெருமையோடு சுட்டிக்காட்ட கட

## விவசாய பயிர்க்கடன் - மகளிர் சுய உதவிக் குழு கடன் - நகைக் கடன் என ரூ.19,145 கோடி கடன் தள்ளுபடி!

மைப்பட்டிருக்கிறேன். ஆக, இன்றைக்கு பொருளாதாரம் வளர்ந்திருக்கிறது. தமிழ்நாடு இந்தியாவில் முதன்மை மாநிலமாக இருக்கிறது என்றால் விவசாயப் பெருங்குடி மக்கள் நிரம்பிய மாநிலம் நம்முடைய மாநிலம். ஆகவே, இந்த விவசாயிகள் ஈடுபடக்கூடிய விவசாயிகளுக்கு உழுதவன் கணக்குப் பார்த்தால் உழவிற்குக்கூட மிஞ்சாது என்பார்கள். இதையெல்லாம் போக்குகின்ற வகையில் அந்த விவசாயிகளினுடைய சுமைகளை களைகின்ற ஒரு முதலமைச்சராக நம்முடைய முதலமைச்சர் அவர்கள் விளங்குகிறார்கள் என்பதற்கு எடுத்துக்காட்டுதான் அந்த விவசாயிகளை ஊக்குவிக்கின்ற வகையில் பல்வேறு வகையான சலுகைகளை அளித்து, அதை அந்த வேளாண் தொழிலுக்கு, விவசாயிகளுக்கு உயிரூட்டி வருகின்ற ஒரு முதலமைச்சராக அவர்கள் இருக்கிறார்கள் (மேசையைத் தட்டும் ஒலி). தமிழ்நாட்டில் விவசாயிகளின் நலனை தன் நலமாகக் கருதும் தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் தளபதியார் அவர்களின் தலைமையிலான இந்த அரசு பொறுப்பேற்ற பின்னர் கூட்டுறவு சங்கங்களின் வரலாற்றில் முதன்முறையாக பயிர்க் கடன் அளவு ரூபாய் 10,000 கோடியை தாண்டியது.

ஏனென்றால் இதையெல்லாம் கேட்பதற்கு எதிர்க்கட்சியில் இருந்தவர்களுக்கு அதை தாங்கிக்கொள்ள முடியாத காரணத்தாலேதான் அவர்கள் இன்றைக்கு நாகரிகமாக வெளிநடப்பு செய்திருக்கிறார்கள் என்று நான் கருதுகிறேன் (மேசையைத் தட்டும் ஒலி). காரணம் என்னவென்றால் நான் ஏற்கெனவேகூட சொன்னேன். 31 ஆண்டுகளுக்கு மேலாக ஆண்ட கட்சி நாங்கள்தான் என்று பெருமையாக சொல்கிறார்கள். அதில் மாறுபட்ட கருத்து இல்லை. அது வரலாறு. அதை சொல்வதற்கான உரிமை அவர்களுக்கு இருக்கிறது. ஆனால், அவர்கள் சாதித்தது என்ன. 31 ஆண்டுகாலம் ஆண்டு விட்டு அதில் செய்ய வேண்டியதை எல்லாம் விட்டு விட்டு இப்பொழுது இந்த நான்காண்டு காலத்தில் இந்த அரசு முதலமைச்சர் அண்ணன் அவர்களுடைய தலைமையில் பொறுப்பேற்ற பிறகு செய்திருக்கின்ற இந்தச் சாதனைகளை தாங்கிக்கொள்ள முடியாத காரணத்தால் இன்றைக்கு அவர்கள் வெளிநடப்பு செய்திருக்கிறார்கள்.

### நான்கு ஆண்டு காலத்தில் ரூ.55,686 கோடி பயிர்க்கடன்!

20212022 ஆம் ஆண்டில் 14 இலட்சத்து 84 ஆயிரத்து 52 விவசாயிகளுக்கு 10,292 கோடி ரூபாய் வழங்கப்பட்டு சாதனையாக இருந்தது. விவசாயிகளுக்கு மட்டும் வழங்கப்பட்ட பயிர்க் கடன் 10,292 கோடி. இது வரை அந்த அளவிற்கு எதுவும் நடந்ததில்லை. நடப்பு நிதியாண்டில் நீங்கள் பார்த்தீர்களென்றால் 18 இலட்சத்து 20 ஆயிரத்து 340 விவசாயிகளுக்கு 16,410 கோடி ரூபாய் இதுவரை பயிர்க் கடனாக மார்ச் மாதம் கடைசி வரை வழங்கப்பட்டிருக்கிறது (மேசையைத் தட்டும் ஒலி). மேலும், பயிர்க் கடன் பெற்ற மொத்த விவசாயிகளில் சிறு, குறு விவசாயிகளின் எண்ணிக்கை மட்டும் 15 இலட்சத்து 70 ஆயிரத்து 77. இது பயிர்க் கடன் பெற்ற மொத்த விவசாயிகளின் எண்ணிக்கையில் 86 சதவிகிதம் ஆகும். சிறு, குறு விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட மொத்த பயிர்க் கடன் தொகை 13,522 கோடி. இது மொத்த பயிர்க் கடனில் 82 சதவிகிதம் ஆகும். சிறு, குறு விவசாயிகளுக்கு பயிர்க் கடன் வழங்கியதிலும் நம்முடைய தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான அரசு குறிப்பிடத்தக்க சாதனையை புரிந்துள்ளது. அஇஅதிமுகவின் கடந்த 10 ஆண்டுகால ஆட்சியில் வழங்கப்பட்ட பயிர்க் கடன்களினுடைய மொத்தத் தொகை 60,646 கோடி தான். பத்து வருடத்தில் 2011 2021 வரை அவர்கள் வழங்கிய பயிர்க் கடன். ஆனால், இந்த அரசு பொறுப்பேற்று இந்த நான்காண்டு காலத்தில் நம்முடைய முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான இந்த அரசு வழங்கியிருக்கக்கூடிய பயிர்க் கடன்கள் ரூ.55,686 கோடி. ஆக, இது ஆண்டு சராசரி கணக்கு என்று பார்த்தீர்களென்றால் 13,921 கோடி ஆகும். ஆக, இது கடந்த ஆட்சிக் காலத்தில் வழங்கப்பட்ட பயிர்க் கடன்களை விட இரண்டு மடங்குகளுக்கு மேலான தொகை (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

தற்போது உழவர் கடன் அட்டை திட்டத்தின்கீழ் விவசாயிகளுக்கு ரூபாய் மூன்று இலட்சம் வரை கடன் வழங்கப்பட்டு வருகிறது. இந்தக் கடனை உரிய காலத்தில் திருப்பிச் செலுத்தும் விவசாயிகளுக்கு வட்டித்தொகை முழுவதும் அரசே ஏற்கிறது. இத்திட்டத்தைப் போலவே 20212022 ஆம் ஆண்டு முதல் கால்நடை பராமரிப்பு மற்றும் அவை சார்ந்த இதர பணிகளுக்கும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இந்த திட்டத்தை விரிவுபடுத்தினார்கள். இத்திட்டத்தின் மூலமாக இதுவரை 6,666 கோடி கடன் வழங்கப்பட்டு 12 இலட்சத்து 41 ஆயிரத்து 931 விவசாயிகள் பலன் அடைந்துள்ளனர். இது ஒரு மிகப்பெரிய பொருளாதார மாற்றத்தை, உயர்வை ஏற்படுத்தியிருக்கிறது (மேசையைத் தட்டும் ஒலி). உழவர்களின் உழவுப் பணிக்கு குறைந்த வாடகையில் இயந்திரங்கள் கிடைக்கும் வகையில் வேளாண் துறையிலும் கொடுக்கிறார்கள். அதேபோல நம்முடைய கூட்டுறவுத் துறையின் சார்பிலும் 7,679 எண்ணிக்கையிலான வேளாண் இயந்திரங்கள் மற்றும் இணைப்புக் கருவிகள் கூட்டுறவுத் துறையின் மூலமாக கொள்முதல் செய்யப்பட்டு வேளாண்மை பணிகளுக்கு

### மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கப்படும் கடன்!

மாற்றுத் திறனாளிகளுக்கு கடன் வழங்குவதில் சிறப்பாக செயல்பட்டதற்காக தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி, "சிறந்த கடன் வழங்கும் நிறுவனம்" Best Channelizing Agency என்ற ஒன்றிய அரசின் விருதினை, தொடர்ந்து ஐந்து ஆண்டுகளாக நம்முடைய வங்கிகள் பெற்றுவருகின்றன.

மாற்றுத்திறனாளிகள் தன்னம்பிக்கையுடன் அவர்கள் வாழ்க்கையை மேற்கொள்ளவும், அவர்களின் பொருளாதாரம் மற்றும் வருமானத்தை உயர்த்தும்வகையில், இது வரை 48,809 மாற்றுத் திறனாளிகளுக்கு ரூ.234 கோடி அளவிற்கு கடன் வழங்கப்பட்டுள்ளது.

### மகளிர் சுய உதவிக் குழுக் கடன்!

மகளிரின் சமூகப் பொருளாதார நிலை மேம்பட வேண்டும் என்பதற்காகவும், அடித்தட்டிலிருந்து பொருளாதார முன்னேற்றத்தைக் கொண்டுவர வேண்டும் என்பதற்காகவும், முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களால் 1989 ஆம் ஆண்டு தருமபுரி மாவட்டத்தில் உருவாக்கப்பட்டதுதான், இந்த மகளிர் சுய உதவிக் குழுக்கள் திட்டம்.

இன்று இந்திய அளவில், அனைவராலும் இத்திட்டம் ஏற்றுக் கொள்ளப்பட்டு, சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இந்த மகளிர் சுய உதவிக் குழு திட்டத்தை 20062011 காலகட்டத்தில் இன்றைய நம்முடைய முதலமைச்சர் அவர்கள், அன்றைய துணை முதல்வராக தனது பொறுப்பில் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு சுழல் நிதி வழங்கி மெருகூட்டினார்.

முதலமைச்சர் அவர்கள் தலைமையில் அரசு அமைந்தபின், மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு கூட்டுறவுத் துறைமூலம் வழங்கப்படும் கடன் உச்சவரம்பு ரூ.10 இலட்சத்திலிருந்து, ரூ.20 இலட்சமாக உயர்த்தப் பட்டது. தற்போது, மீண்டும் சமீபத்தில், இக்கடன் உச்சவரம்பு ரூ.20 இலட்சத்திலிருந்து ரூ.30 இலட்சமாக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது என்பதையும் நான் இங்கு பெருமையோடு சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முதல்வர் அவர்கள் தலைமையிலான அரசு பொறுப்பேற்ற நான்கு ஆண்டுகளில் 2,01,313 குழுக்களுக்கு ரூ.11,870/ கோடி அளவிற்கு கடன்கள் இதுவரை வழங்கப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி)

### நகைக் கடன்!

பல்வேறு கூட்டுறவு வங்கிகள் மற்றும் கூட்டுறவு நிறுவனங்கள் மூலம் நடுத்தர மற்றும் ஏழை, எளிய மக்களின் அவசரத் தேவைக்காக தங்க நகைகளுக்கு ஈடாக நகைக் கடன் வழங்கப்பட்டு வருகிறது. இந்த நிதியாண்டில் இதுவரை 70 இலட்சத்து 28 ஆயிரத்து 661 நபர்களுக்கு ரூ.62,001/ கோடி அளவிற்கு நகைக் கடன் வழங்கப்பட்டுள்ளது. இதுவும் ஓர் மிகப் பெரிய சாதனை. (மேசையைத் தட்டும் ஒலி)

பண்ணை சாராக் கடன்கள் மற்றும் இதர நீண்ட கால நிலுவை இனங்களுக்கான சிறப்பு கடன் தீர்வுத் திட்டம் 2023

உறுப்பினர் கொங்கு நாடு தேசிய கட்சி அண்ணன் திரு. ஈஸ்வரன் அவர்கள் வலியுறுத்திக் கேட்டிருந்தார்கள். மேலும், செய்தித் துறை அமைச்சர் அவர்கள் சொன்னதன்பேரில் வந்துள்ளது. அத்திட்டம் வந்த அளவில் விவசாயிகள் இத்திட்டத்தில் ஆர்வம் காட்ட வில்லை.

தமிழ்நாட்டில் உள்ள கூட்டுறவு சங்கங்கள் மற்றும் கூட்டுறவு வங்கிகள் பல்வேறு வகையான கடன்களை வழங்கி வருகின்றன. இந்நிலையில் கூட்டுறவு நிறு வனங்களில் நீண்ட காலமாக நிலுவையுள்ள தவணை தவறிய பண்ணை சாரா கடன்களுக்கு சிறப்புக் கடன் தீர்வுத் திட்டம் 2023ல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் கடன்களை தீர்வு செய்ய 2,69,502 பயனாளிகள் தகுதி பெற்றனர். அவர்கள் செலுத்த வேண்டிய தொகை ரூ.918.87 கோடி ஆகும். அதில், 45,174 பயனாளிகள் ரூ.166 கோடிகள் செலுத்தி பயன்பெற்றுள்ளனர்.

இத்திட்டத்தின்மூலம் அவர்கள் பெற்ற கடனுக்கு வட்டியானது, 9% குறைக்கப்பட்டு, அபராத வட்டி மற்றும் இதர செலவினங்கள் தள்ளுபடி செய்யப்பட்டவகையில், ரூ.33 கோடி பயனாளிகளுக்கு பயன் கிடைத்துள்ளது.

கணவனை இழந்த கைம்பெண்கள் மற்றும் கணவனால் கைவிடப்பட்ட பெண்களுக்கான கடன்,

கணவனை இழந்த கைம்பெண்கள் மற்றும் கணவனால் கைவிடப்பட்ட பெண்களின் சமூக, பொருளாதார நிலையை மேம்படுத்த ஏதுவாக, அவர்களது நலனைக் கருத்தில் கொண்டு, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான அரசால் மிகக் குறைந்த வட்டி விகிதமான 5 சதவிகிதம் என்கிற அளவில் வட்டியில் கடன் வழங்குவதற்கு அறிவிப்பு வெளியிடப்பட்டு, இந்த நான்கு ஆண்டுகளில் 19,869 கைம்பெண்கள் மற்றும் கணவனால் கைவிடப்பட்ட பெண்களுக்கு ரூ.65 கோடி அளவிற்கு கடன் வழங்கப்பட்டுள்ளது.

### சிறு வணிகக் கடன்!

பூ, காய்கறிகள், பழங்கள் வியாபாரம் செய்தல், பெட்டிக் கடை போன்ற சிறு வணிகங்கள் செய்பவர்கள் தனியாரிடம் அதிக வட்டியில் கடன் பெறுவதைத் தடுத்து குறைந்த வட்டியில் கடன் பெற்று பயன்பெறும்வகையில் கூட்டுறவு வங்கிகளில் சிறுவணிகக் கடன் வழங்கப்படுகிறது. இந்த நிதியாண்டில், இதுவரை 79,152 நபர்களுக்கு ரூ.344 கோடி சிறு வணிகக் கடன் வழங்கப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

### அண்ணல் அம்பேத்கர் வணிக முன்னோடி திட்டம்!

அண்ணல் அம்பேத்கர் வணிக முன்னோடி திட்டம்மூலம் பட்டியல் வகுப்பினர் மற்றும் பட்டியல் பழங்குடியினரை தொழில் முனைவோராக மாற்றி அவர்களின் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்தும் வகையில், தமிழக அரசால் 01042023 முதல் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் தொழில் முனைவோர் தங்கள் தொழிலைத் தொடங்க மற்றும் மேம்படுத்த மூலதனத்தை மானியமாகவும், குறைந்த வட்டியில் கடனாகவும் வழங்கப்படுகிறது. மேலும், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களை வாங்குவதற்கான கடனுக்கு வட்டி மானியமும் வழங்கப்படுகிறது.

மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளின்மூலம், இத்திட்டத்தின்கீழ் கழிவுநீர் அகற்றும் வாகனங்கள் வாங்குவதற்காக இந்த நிதியாண்டில் 86 தொழில் முனைவோருக்கு ரூ.52.34 கோடி கடனுதவி வழங்கப்பட்டது. NEEDS திட்டத்தின் மூலமாக 13 தொழில் முனைவோருக்கு ரூ.8.56 கோடி கடனுதவி வழங்கப்பட்டது. மேற்கண்ட இரண்டு திட்டத்தின்கீழ் கொள்முதல் செய்யப்பட்ட கழிவுநீர் அகற்றும் வாகனங்களை கடந்த 06122024 அன்று சென்னையில் நடைபெற்ற விழாவில், நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பயனாளிகளுக்கு வழங்கினார்கள்.

### 'சிறகுகள்' சிறப்புக்கடன் திட்டம்

சமூகத்தில் விளிம்பு நிலையில் உள்ள மாற்றுத்திறனாளிகள், அவர்தம் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கான அடிப்படை நிதிச் சேவைகளைப் பெறுவதில் ஏற்படும் சிரமங்களை களைந்து, அவர்களின் பொருளாதார ரீதியான உள்ளடக்கத்தை உறுதி செய்யும் பொருட்டு, 'சிறகுகள்' சிறப்புக்கடன் திட்டம் நவம்பர் 2024ல் அறிமுகப்படுத்தப்பட்டது. இதற்கும் 5% அளவிலான மிகக் குறைந்த வட்டி விகிதத்தில் ரூ.1,00,000 வரை கடன் பெறுகிறவகையில் இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

கொரோனா தொற்று காரணமாக மக்களின் தொடர் இன்னல்களையும், துன்பங்களையும் போக்குவதற்கும், அவர்களின் வாழ்வாதாரத்திற்கு உதவும் வகையிலும் கூட்டுறவுத்துறை மூலமாக அரிசி குடும்ப அட்டை வைத்துள்ள குடும்பங்கள் அனைத்திற்கும் ஆறுதல் அளிக்கும் வகையில் முதலமைச்சர் அவர்கள் அறிவித்த 4,000 ரூபாய் தொகையை 2 கோடியே 8 இலட்சத்து 24 ஆயிரத்து 176 அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு இரண்டு தவணைகளில் கொண்டு போய் சேர்த்ததும் இந்தத் துறை. அதன் தொடர்ச்சியாக, மேலும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்த அறிவிப்பின்படி, ஜுன் 2021 முதல் ஜுலை 2021 வரை 2 கோடியே 7 இலட்சத்து 70 ஆயிரத்து 332 அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு 14 வகையான மளிகை பொருட்களையும் இத்துறையின் மூலமாகத்தான் கொண்டு போய் சேர்த்திருக்கிறது.

அதேபோல, பொங்கல் தொகுப்பு. தமிழர் திருநாளாம் தைப்பொங்கல் பண்டிகையை தமிழக மக்கள் சிறப்பாக கொண்டாடும் வகையில் இந்தாண்டு பொங்கல் பண்டிகையின்போது, 1 கோடியே 94 இலட்சத்து 16 ஆயிரத்து 362 குடும்ப அட்டைதாரர்கள் மற்றும் இலங்கைத் தமிழர்வாழ் முகாம்களில் வசிக்கும் குடும்பங்க ளுக்கு ஒரு கிலோ பச்சரிசி, கரும்பு, சர்க்கரை ஆகியவற்றையும் வழங்கியிருக்கிறது.

பொது விநியோகத் திட்டத்தின்மூலம் குடிமைப் பொருட்களை வழங்குவதில் தமிழ்நாடு முன்னோடி மாநிலமாக திகழ்கிறது. குடிமைப் பொருட்களை எல்லா காலச்சூழ்நிலைகளிலும் பொதுமக்களிடம் தங்குதடையின்றி கொண்டு சேர்க்கும் பணி திறம்பட மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தமிழ்நாடு முழுவதும் உள்ள நியாய விலைக் கடைகளில் 35,039 நியாய விலைக் கடைகள் கூட்டுறவுத் துறை மூலமாக நடத்தப்பட்டு வருகின்றன. இதில் முழுநேர கடைகள் 24,689. இதில் 17,437 கிராமப்புற பகுதிகளிலும், 7,247 நகர்ப்புற பகுதிகளிலும் செயல்படுகின்றன. மேலும், 2,494 நகரும் நியாய விலைக் கடைகளும் செயல்பட்டு வருகின்றன.

### 2713 கடைகளுக்கு விரைவில் சொந்த கட்டிடம்!

உறுப்பினர்கள் பேசும்போது, புதிய கடைகள், கட்டடங்கள் கட்ட வேண்டுமென்றும் பழைய கடைகளைப் புதுப்பிக்க வேண்டுமென்றும் கோரியிருந்தார்கள். அந்த அடிப்படையில், வாடகைக் கட்டடங்களில் இயங்கும் நியாய விலைக் கடைகளுக்கு புதிய கட்டடங்கள் கட்டும் பணிகள் கூட்டுறவுத் துறையின் மூலம் நடத்தப்பட்டு வரும் நியாய விலைக் கடைகளில் 6,215 நியாய விலைக் கடைகள் தான் வாடகை கட்டடத்தில் இதுவரை இருக்கின்றன. ஏற்கெனவே நான் கூறிய 35,036 கடைகளில் இவை அடங்கும். இவற்றில் 5,747 முழுநேரக் கடைகளும், 468 பகுதி நேரக் கடைகளும் என ஆகும். இதில் 3,502 கடைகளுக்கு சொந்த கட்டடம் கட்டுவதற்கு இடங்கள் தேர்வு செய்யப்பட்டு, அப்பணிகள் இப்பொழுது நடைபெற்று வருகின்றன. மீதமுள்ள 2,713 நியாய விலைக் கடைகளுக்கும் விரைவில் சொந்த கட்டடத்திற்கு மாறும் என்பதற்கான முயற்சிகளை இத்துறை மேற்கொண்டிருக்கிறது. ஆகவே, நீங்கள் பார்த்தீர்களென்றால், 35 ஆயிரம் கடைகளில்

தொடர்ச்சி 6 ஆம் பக்கம்